## ரூ.342.60 கோடி மதிப்பீட்டில்

# கோவளம் உபவடிநிலப் பகுதியில் “மாமல்லன்” புதிய குடிநீர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜன. 20 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.01.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் 5161 ஏக்கர் பரப்பளவில் 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் நீர்த்தேக்கத்திற்கு “மாமல்லன்” என்று பெயர் சூட்டி, நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

### கோவளம் உபவடிநிலப் பகுதியில் ‘‘மாமல்லன்’’ புதிய குடிநீர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணி

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தையூர், மானமதி, சிறுதாவூர், காளவாக்கம், ஆமூர், பையனூர் உள்ளிட்ட 69 ஏரிகளின் உபரி நீர், உப்பளம் மற்றும் அரசுக்குச் சொந்தமான காலி நிலம் வழியாக பக்கிங்காம் கால்வாயில் வெளியேற்றப்பட்டு, இறுதியாக முட்டுக்காடு, கோகிலமேடு முகத்துவாரங்களில் கடலில் கலக்கிறது.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கவும், நீர் வழங்கலை பரவலாக்கவும், 2025-2026 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் புதிய நீர்த் தேக்கம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இப்புதிய நீர்த்தேக்கமானது சென்னை வடிநிலப்பகுதியில் உள்ள கோவளம் உபவடிநிலப் பகுதியில் அமையவுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையே உள்ள 3010 ஏக்கர் உப்பளப் பகுதி உட்பட மொத்தம் 5161 ஏக்கர் அரசு நிலங்களில் அமைக்கப்படவுள்ளது.

தற்போது அப்பகுதியில் முட்டுக்காடு பகுதியிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவிற்கு மட்டுமே பக்கிங்காம் கால்வாய் வழியாக உயர்ந்த அலையின் (High Tide) பொழுது கடல்நீர் உள்ளே வருகிறது. இவ்வாறாகவே கோகிலமேடு முகத்துவாரத்திலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவிற்கு மட்டுமே பக்கிங்காம் கால்வாய் வழியாக உயர்ந்த அலையின் (High Tide) பொழுது பக்கிங்காம் கால்வாய் வழியாக கடல்நீர் உள்ளே வருகிறது. இதற்கு இடைப்பட்ட பகுதியில் பக்கிங்காம் கால்வாய் தூர்ந்து கடல்நீர் உள்வருவதில்லை. மேலும் மழைக்காலங்களில் இப்பகுதி முழுவதும் மழை நீர் மட்டுமே தேங்கி அதன்பின் கடலில் மெதுவாக கலக்கிறது.

புதிய நீர்த்தேக்கம் அமைப்பதற்கு 34 கி.மீ. நீளத்திற்கு மண் கரை அமைக்கும் பணி, கோகிலமேடு முகத் துவாரத்திற்கு வெள்ள நீர் செல்வதற்கு ஏதுவாக நீர் தேக்கத்தின் தெற்கு பகுதியில் நீரொழிங்கி அமைத்தல், நீர் உள்வாங்குவதற்கும் மழைநீரை வெளியேற்றுவதற்கும் தேவையான நீரொழிங்கிகள் அமைத்தல், தேவைக்கு அதிகமான வெள்ள நீரினை மேற்கு மற்றும் கிழக்குப் புற வெளிப்புற வடிகால்கள் மூலம் முட்டுக்காடு மற்றும் கோகிலமேடு முகத்துவாரங்கள் மூலம் வெளியேற்ற வடிகால்கள் அமைக்கும் பணிகள் அமையவுள்ளன. மேலும், பக்கிங்காம் கால்வாய் திருவிடந்தையிலிருந்து மகாபலிபுரம் வரை முற்றிலுமாக சீரமைத்து கடல்நீர் வருவதற்கேற்ப புனரமைக்க உத்தேகிக்கப்பட்டுள்ளது.

**இந்தத் திட்டத்தின் வாயிலாக நாள் ஒன்றுக்கு 170 மில்லியன் லிட்டர் குடிநீரை மக்களுக்கு வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், சோழிங்கநல்லூர், மேடவாக்கம், பள்ளிக்கரணை, சிறுசேரி, கேளம்பாக்கம், திருப்போரூர், மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 13 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.**

### நீர் பாதுகாப்பு விருதுகள்!

மாமல்லன் நீர்த் தேக்க அடிக்கல் நாட்டு விழாவில், மாநிலம் முழுவதும் நீர்நிலைகளை புனரமைத்து பாதுகாத்து சிறப்பான முறையில் செயலாற்றிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களான (NGO) சிறு துளி, இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை, எக்ஸ்னோரா சர்வதேச அறக்கட்டளை, எச்.சி.எல். அறக்கட்டளை, தன் அறக்கட்டளை, மெகா அறக்கட்டளை, ரோப் நிறுவனங்கள், டி.வி.எஸ். சீனிவாசன் அறக்கட்டளை, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதார பிரிவு, அண்ணா பல்கலைக் கழகம் நீர்வள ஆதார மையம். பிரதான் அறக்கட்டளை, வனத்துக்குள் திருப்பூர், கோவை குளங்கள், பயோட்டா மண் அறக்கட்டளை, தர்மபுரி ஆதி அறக்கட்டளை ஆகிய அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று சிறந்த நீர் பாதுகாத்தல் விருதுகளை (Best Water Conservation Award) வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப் பினர்கள் க.செல்வம், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கோபாலகிருஷ்ணன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் பொதுப்பணி திலகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் 5161 ஏக்கர் பரப்பளவில் 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் “மாமல்லன்” புதிய குடிநீர்த்தேக்கம் அமைக்கும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.செல்வம், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






## திராவிட முன்னேற்றக் கழக அரசு

# காலத்துக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொண்டு வருகிறது!

## ஓசூரில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**ஓசூர், ஜன.20-**

**தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, 2026 சட்டப் பேரவைத் தேர்தலுக்கான தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஜனவரி 19 ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் கோவி.செழியன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா மற்றும் எம்.எம்.அப்துல்லா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய குழு பயணம் செய்து பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளை அளிக்கவுள்ளனர்.**

இந்த நிலையில், நேற்று (19.01.2026) சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஆனந்த் கிராண்ட் பேலஸில் தொடங்கியது. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் முதல் கருத்துக் கேட்புக் கூட்டம் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கனிமொழி கருணாநிதி எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, எம்.எம்.அப்துல்லா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் குழு உறுப்பினர்கள், தொழில் முனைவோர், விவசாயிகள், வணிகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகளை கேட்டறிந்தனர்.



இதைத் தொடர்ந்து பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இந்த தேர்தல் அறிக்கை குழு மக்களைச் சந்தித்து, அவர்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்து தேர்தல் அறிக்கை தயாரிக்க வேண்டும் என்று எங்களை பணித்துள்ளார். அந்த பணியை ஏற்று, இன்று குழுவின் முதல் சந்திப்பு ஓசூரில் தொடங்கியுள்ளோம்.

“மக்களைத் தேடிச் செல்லுங்கள், மக்களிடம் செல்லுங்கள்” என்று பேரறிஞர் அண்ணா கூறினார். அந்த வழியில், திராவிட முன்னேற்றக் கழகம் ஒவ்வொரு முறையும் மக்களிடமிருந்து கருத்துகளை கேட்டறிந்து, மக்களுடைய தேர்தல் அறிக்கையாகவே எழுதப்படுகிறது.

“சொல்வதை செய்வோம், செய்வதை சொல்லுவோம்” என்று கலைஞர் கூறுவார். கடந்த தேர்தல் அறிக்கையில் தி.மு.க. 505 தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியது. அவற்றில் 404 வாக்குறுதிகளை தி.மு.க. அரசு நிறைவேற்றியுள்ளது. இருப்பினும், பலர் எத்தனை தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும், அதற்கான வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் கேட்கிறார்கள்.

ஒன்றிய அரசு ஒவ்வொரு நாளும் தமிழ்நாடு அரசுக்கு இடைஞ்சல் செய்து வருகிறார்கள். அதற்கு இடையிலும் தமிழகத்தை முன்னேறிய மாநிலமாக உருவாக்கி வருகிறோம்.

ஒன்றிய அரசு, ஓசூரில் விமான நிலையம் அமைக்க முடியாது என தெரிவித்து வருகிறது. ஆனால், முடியாததையும் முடித்துக் காட்டும் தி.மு.க. அரசு, ஓசூரில் விமான நிலையம் அமையும் என நமது தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா இங்கு தெரிவித்துள்ளார். ஒன்றிய அரசு நிதி வழங்காவிட்டாலும், எவ்வளவு தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும், மீதமுள்ள 101 வாக்குறுதிகளையும் தி.மு.க. அரசு நிறைவேற்றும்.



நிறைவேற்றிக் காட்டுவோம் என்ற நம்பிக்கையில் உங்களைச் சந்திக்க நாங்கள் வந்துள்ளோம். உங்களுடைய கருத்துகளை கேட்டு, எதெல்லாம் சாத்தியமோ அவை அனைத்தையும் தேர்தல் அறிக்கையில் இணைக்கப்படும் என்ற உறுதியை நான் வழங்குகிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களின் கருத்துகளை அறிந்துகொள்ள தனியாக ஒரு ஆன்லைன் போர்டல் (செயலியை) ஏற்படுத்தி உள்ளார். அதில் மக்கள் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளில் தெரிவிக்க வேண்டிய கருத்துகளை தெரிவிக்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்துக்கு ஏற்ப தங்களை தகவமைத்து கொண்டு வருகிறது. ஃபேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக ஊடகங்கள் வருவதற்கு முன்பே முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி சமூக வலைதளங்களில் மிகவும் ஆக்டிவாக இருந்தார்.

அந்த வழியில், ஆன்லைன் போர்டல் மூலம் உலகத்தின் எந்த மூலையில் தமிழர்கள் இருந்தாலும், தங்களுடைய கருத்துகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) மூலமாகவும் இந்த தேர்தல் அறிக்கையை உருவாக்க உள்ளோம். மேலும், மக்களிடமே நேரடியாக வரக்கூடிய ஒரே இயக்கம் தி.மு.க. என்று பேசினார்.

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழிற்சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.